ஊழியர்கள் சொந்தமாக வீடு வேண்டும் என்று விரும்பினால், அவர்கள் அரசாங்கத்திடம் கடனுக்கு மனுசெய்து, அரசாங்கத்தின் மூலமாக கடன் உதவி பெற்று, அவர்கள் சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்ள இயலும். இரண்டாவதாக, வீட்டு வசதி வாரியம் ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு திட்டத்திலும் ஒதுக்குகிற வீடுகளில் 18 சதவீத வீடுகள் அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்காக இன்றைக்கு ஒதுக்குகிறது. எனவே, இதன் மூலமாக அரசு ஊழியர்கள் சொந்தமாக வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியூர்களிலிருந்து மாறுதலாகி வரும் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதி செய்ய ஒவ்வொரு ஊரிலும் ஒரு குறிப்பிட்ட ஒதுக்கீடு வீட்டு வசதி வாரியத்தாலே செய்யப்படுமா? ஏனெனில், வசதியான வீடுகள் வாடகைக்குக் கிடைக்கவில்லை என்றால், சில ஊர்களுக்கு அரசு அலுவலர்கள் பணிக்கே வருவதில்லை. எனவே, சில வீடுகளை, காவல்துறை அதிகாரிகளுக்கு, மருத்துவத்துறை அதிகாரிகளுக்கு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளுக்கு என்று ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்திலே இருக்கிற குடியிருப்பு வீடுகளில் எவையெல்லாம் காலியாக இருக்கிறதோ, அவை எல்லாம் அந்தப் பகுதிக்களுக்கு மாற்றலாகி வருகிறவர்களுக்கு உடனுக்குடன் கொடுக்கப்படுகின்றன என்பதையும், அங்கே பதிவுப் பட்டியல் வைக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பதிவு செய்தவர்களுக்கு முதலிலே கொடுக்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 171, திரு. கி. பாலசுப்பிரமணியன் ; மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

171--

பட்டுக்கோட்டையில் விதை நெல் சுத்தம் செய்யும் நிறுவனம் அமைத்தல்

22743*-திரு. கி. பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1994 ஏப்ரல் 4]

(அ) பட்டுக்கோட்டையில் விதை நெல் சுத்தம் செய்யும் நிறுவனம் இயங்க ஏற்பாடு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார். என்னுடைய தொகுதியிலே நெல்லை தரம் வாரியாகப் பிரித்து, சில சமயங்களில் விவசாயிகளுக்கு விதை நெல் கிடைக்காமல் கஷ்டப்படும் வேளையிலே இம்மாதிரி அரசுத் தரப்பிலிருந்து ரகவாரியாக அதைச் சுத்தப்படுத்தி, அந்த விதைகளை சேகரித்து வைத்து, அவர்கள் கேட்கும் போது, கொடுக்கின்ற நிறுவனத்தை அமைக்கின்ற திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்து, அமைத்துக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட விதை நெல் இல்லை என்ற சொல்லே தமிழகத்திலே இல்லை. தமிழக விவசாயிகளுக்குத் தேவையான சுத்திகரிக்கப்பட்ட நெல் விதைகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், தமிழகத்திற்குத் தேவையான 25 ஆயிரம் மெட்ரிக் டன் விதைகளை அரசு கொள்முதல் செய்து, அவைகள் சுத்திகரிக்கப்பட்டு, தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவைகளைச் சுத்திகரிப்பதற்கு வேண்டிய பெரிய சுத்திகரிப்பு நிலையங்கள் 16-ம், நடுத்தர விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூன்றும், 32 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்களும் தமிழகத்தில் இருக்கின்றன. எனவே, கூடுதலாக பட்டுக்கோட்டைக்குத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நன்றி என்று

சொன்னார்கள். ஆனால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்ற விதை சுத்திகரிப்பு நிலையங்கள் காலாகாலத்தில் விதையைச் சுத்திகரித்துக் கொடுக்கின்ற அளவிற்குப் போதுமானதாக இல்லை. திருவாரூரிலே உள்ள சுத்திகரிப்பு நிலையத்திலேதான் விதைகளைச் சுத்திகரிப்புச் செய்கின்ற செயலைச் செய்கிறார்கள். 3 மாத காலத்தில் அதைக் கொடுக்க முடியாத காரணத்தால், ஆற்றிலே தண்ணீர் திறந்து விட்டால் காலகாலத்தில் கிடைக்கின்ற வாய்ப்பு குறைவாக இருக்கிற காரணத்தால், அங்கே கூடுதலாக ஒரு சுத்திகரிப்பு நிலையம் இருந்தால், விதையைக் கூடியவிரைவில் சுத்தம் செய்து விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கொடுக்க முடியும். எனவே, இந்த அடிப்படையை வைத்து, இன்னும் கூடுதலாக ஒரு விதை சுத்திகரிப்பு நிலையம் முன்னுரிமை அடிப்படையிலே நிறுவப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.45

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவசாயிக்குத் தேவைப்படுகின்ற விதைகள், மூன்று மாதங்களுக்கு முன்னாலே சுத்திகரிக்கப்பட்டு, வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல விதை சுத்திகரிப்பதற்காக 3 மாதங்கள், 4 மாதங்கள் யாரும் காத்திருக்க வேண்டியதில்லை. இதன் வாயிலாக எந்தத் தட்டுப்பாடும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதை சுத்திகரிப்பு நிலையங்களை அரசாங்கம் மட்டுமே நடத்துவது என்பது பொருத்தமாக இருக்காது. எனவேதான் அரசாங்கம், தனியார்களும், கூட்டுறவுத் துறைகளும் இதுபோன்ற புதிய சுத்திகரிப்பு நிலையங்களைக் கொண்டுவரவேண்டும் என நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில், வேளாண்மையில் படித்து, பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருக்கக் கூடிய அந்த பட்டதாரிகள் விதை சுத்திகரிப்பு நிலையங்களை தாங்களே தனியாக தொடக்க முன்வருவார்கள் என்று சொன்னால், அரசாங்கம் அவர்களுக்கு ரூ. 30,000-த்தை அந்த நிலையத்திற்கு மானியமாக வழங்குகின்ற திட்டத்தையும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 172, திரு. கா. பூ. முனுசாமி ; மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

172--